

மெட்ரோ ரெயிலில் இலவச பயணத்திற்காக திரண்ட பயணிகள்.

### ஆசியாவிலேயே மிகப்பெரியது

# வியக்க வைக்கும் சென்ட்ரல் 3 அடுக்கு சுரங்க மெட்ரோ ரெயில் நிலையம்

## குடும்பம் குடும்பமாக பயணித்து உற்சாகம்

**சென்னை மெட்ரோ ரெயில்!**

**கொட்டப்பட்ட கோடிகளை நினைத்தாலும் வாவ்... என்று வாயை பிளக்க வைக்கிறது. கொட்டிக்கிடக்கும் அழகைப் பார்த்தாலும் வாவ்... என்றுதான் பிரமிக்க வைக்கிறது.**

**பூமிக்கு அடியில் ஒரு பூலோகம் என்றுதான் சொல்ல வேண்டும்.**

வண்ணாரப்பேட்டையில் இருந்து அண்ணாசாலை, சைதாப் பேட்டை வழியாக விமானநிலையம் வரையிலும்!

அதேபோல் சென்ட்ரலில் இருந்து எழும்பூர், அண்ணா சாலை, கோயம்பேடு வழியாக பரங்கிமலை வரையிலும்!

இப்படி 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட்டு முழுவதும் நிறைவடைந்துள்ளன. டி.எம். எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் போக்குவரத்தை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரையிலும், அதேபோல் சென்ட்ரலில் இருந்து திருமங்கலம் வரையிலும் பூமிக்கடியில் சுரங்கப்பாதையில் ரெயில்கள் சென்று கொண்டிருக்கிறது.

மேல் உலகம் என்று கற்பனையில் ஒரு உலகத்தை சித்தரிப்பார்கள். ஆனால் நம் கண்முன்னால் நமக்கு கீழே ஒரு உலகம் இயங்கி கொண்டிருக்கிறது.

முழு வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கியதை அடுத்து நேற்றும், இன்றும் பயணிகள் இலவசமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடும்பம், குடும்பமாக கூட்டம் கூட்டமாக பொதுமக்கள் மெட்ரோ ரெயிலில் ஏறி பயணிக்கிறார்கள்.

ஏற்கனவே மெட்ரோ ரெயிலில் சென்று வந்தவர்களும் இன்று சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு அடியில் இயங்கும் சுரங்கரெயில் நிலையத்தை பார்த்து அசந்து போனார்கள்.

ஆசியாவிலேயே இரண்டு அடுக்குகளை கொண்ட மிகப்பெரிய சுரங்க ரெயில் நிலையம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ட்ரல் ரெயில் நிலையத்தின் அருகில் மெயின் ரோட்டில் நின்று பார்த்தால் சென்ட்ரல் மெட்ரோ என்ற அறிவிப்பு பெயர் பலகையும், கீழே இறங்கும் படிக்கட்டுகளும் மட்டுமே தெரிகிறது.

சில ஆண்டுகளாக ரோட்டில் ஆங்காங்கே தடுப்புகள் மட்டுமே தெரிந்தது. ஆனால் பூமிக்கடியில் இவ்வளவு பெரிய உலகத்தையே உருவாக்கி இருக்கிறார்களே என்றுதான் வியக்க வைக்கிறது.

சுமார் 60 அடி ஆழத்தில் முதல் தளம் அமைந்துள்ளது. இதில் டிக்கெட் கவுண்டர்கள் உள்ளன. அடுத்தது 2–ம் தளம் அடுக்கு ரெயில் நிலையம். இதில் 2 பிளாட்பாரங்கள். ஒரு பிளாட்பாரம் கோயம்பேடு மார்க்கத்தில் பரங்கிமலை செல்லும் ரெயில்களுக்காக! இன்னொரு பிளாட்பாரம் மறுமார்க்கத்தில் அங்கிருந்து வரும் ரெயில்களுக்காக!

இதில் இருந்து கீழ்தளத்துக்கு இறங்கினால் அங்கு 3–வது தளம். அங்கும் 2 பிளாட்பாரங்கள். ஒன்று விமானநிலையம்–வண்ணாரப்பேட்டை செல்லும் ரெயிலுக்காக இன்னொரு பிளாட்பாரம் வண்ணாரப்பேட்டை– விமானநிலையம் செல்லும் ரெயிலுக்காக!

சென்ட்ரலில் மட்டும் பிளாட்பாரங்களை கடந்து செல்ல 6 சுரங்க நடை பாதைகள்! ஒவ்வொரு தளத்துக்கும் செல்ல லிப்ட், படிக்கட்டு, நகரும் படிக்கட்டுகள் ஆகிய 3 வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. முற்றிலும் குளிரூட்டப்பட்டுள்ளது.

இந்த வசதிகளை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து மகிழ்ந்தனர். ரூ.19 ஆயிரம் கோடிகளை கொட்டியிருந்தாலும், கொஞ்ச வேலையா நடந்து இருக்கிறது...?! என்று ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டதையும் கேட்க முடிந்தது.

சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலில் சிக்கி விழி பிதுங்கி வந்தவர்களுக்கு மெட்ரோ ரெயில் நிச்சயம் கை கொடுக்கும்.

சிட்டிக்குள் இருந்து வெளியே செல்வது எப்போது? விமான நிலையத்தை அடைவது எப்போது என்று அவசரமாக செல்ல வேண்டியவர்கள் தவிப்பது உண்டு. இனி சென்ட்ரலில் இருந்து மெட்ரோ ரெயிலில் ஏறினால் 35 நிமிடத்தில் விமான நிலையத்தை அடைய முடியும்!



அறிவரசன்

**பூமிக்கடியில் செயல்படும் ரெயில் நிலையங்கள்**

வண்ணாரப்பேட்டை, மண்ணடி, ஐகோர்டு, சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு, டி.எம்.எஸ், தேனாம்பேட்டை, நந்தனம், சைதாப்பேட்டை.

எழும்பூர், நேருபூங்கா, கீழ்ப்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி, ஷெனாய்நகர், அண்ணாநகர் கிழக்கு, அண்ணாநகர் டவர், திருமங்கலம்

**அறிவரசன்:–**

தென் சென்னையையும், வட சென்னையையும் இணைக்கும் அருமையான திட்டம். இதேபோல் மாதவரம் – சிறுசேரி வரையிலான திட்டத்தையும் விரைவாக தொடங்க வேண்டும்.

அந்த திட்டத்திற்காக அஜீஸ்நகரில் அமைய உள்ள ரெயில் நிலையத்துக்காக 2½ ஏக்கர் நிலத்தை கொடுத்துள்ளேன். அருமையான திட்டம் நாம் வாழும் காலத்தில் நிறைவேறி இருப்பதை நினைத்தால் பெருமையாக உள்ளது.



விஜயகுமார்

**விஜயகுமார் (வியாசர்பாடி):–**

எனக்கு 62 வயது ஆகிறது. என் வாழ்நாளில் மெட்ரோ ரெயிலை பார்த்துவிட்டேன். இதற்காக நான் வெளி மாநிலமோ வெளிநாடோ போக முடியாது. நமது ஊரிலேயே மெட்ரோ ரெயிலில் பயணிப்பது சந்தோசமான அனுபவமாக உள்ளது.

இவ்வளவு வசதிகள் இருக்கும் போது கட்டணம் அதிகம் என்று சொல்வது சரியாக இருக்காது.

**சீனிவாசன் (வண்ணாரப்பேட்டை):–**

வழக்கமாக விமானநிலையம் செல்வதற்கு



சீனிவாசன் தம்பதி.

2 மணிநேரம் ஆகிவிடும். ஆனால் மெட்ரோ ரெயிலில் 35 நிமிடத்தில் போக முடிகிறது. இது எவ்வளவு பெரிய வசதி! பிரமாதம்.



மதுமதி

**மதுமதி (கல்லூரி மாணவி, வண்ணாரப்பேட்டை)**

தினமும் நெரிசல், காற்று மாசில் சிக்கி படாதபாடுபட்டுதான் கல்லூரி செல்வேன். இனி மெட்ரோ ரெயிலில் பயணம் ஜாலிதான். குளு குளு ஏ.சி., நோ பொல்யூஷன், நோ டிராபிக், சூப்பர் டிராவல்... வட சென்னை வாசிகள் சார்பில் ஒரு 'ஓ' போடலாம்.

**திலகவதி (கொருக்கு பேட்டை):–**

மவுண்ட்ரோடுக்கு செல்ல வேண்டுமென்றால் பிராட்வே வரை ஒரு பஸ்சை பிடித்து



மகன்களுடன் திலகவதி.

இன்னொரு பஸ் மாறி போய் வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.இதுவரை மெட்ரோ ரெயிலில் ஏறியது இல்லை. இனி வண்ணாரப்பேட்டையில் இருந்து மெட்ரோ ரெயிலில் ஏறினால் மின்னல் வேகத்தில் தேனாம்பேட்டைக்கு சென்றுவரலாம். நினைத்தாலே சந்தோசமாக இருக்கிறது.

**தாமோதரன்–சுமதி (வண்ணாரப்பேட்டை) :–**

இது எங்கள கனவு திட்டம். இவ்வளவு சீக்கிரம் முடிவடைந்து எங்கள் பகுதிக்கு மெட்ரோ ரெயில் வரும் என்று எதிர் பார்க்கவில்லை. குடும்பத்தோடு மெட்ரோ



தாமோதரன்–சுமதி

ரெயில் பயணம் செய்து எங்கள் மகிழ்ச்சியை கொண்டாடுகிறோம்.

**சென்னை மெட்ரோ ரெயிலின் உச்சபட்ச வேகம் மணிக்கு 80 கிலோ மீட்டர் ஆகும். நெரிசல் மிகுந்த காலை, மாலை நேரத்தில் 7 நிமிடத்துக்கு ஒரு ரெயிலும் மற்றநேரங்களில் 14 நிமிடத்துக்கு ஒரு ரெயிலும் இயக்கப்படுகிறது.**